# திராவிட மாடல் அரசு 26

‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.







## வருங்கால அதிகாரிகளே, வணக்கம்!

‘கால் காசு சம்பாத்தியம் என்றாலும், சர்க்கார் உத்தியோகம்’ என்பது இன்றும் கிராமப் புறங்களில் சரளமாகப் புழங்குகிற ஒரு சொலவடை. ஆயிரம்தான் தனியார் துறைகளில் பணி வாய்ப்புகள் கொட்டிக் கிடந்தாலும், கை நிறைய ஊதியம் கிடைத்தாலும், அரசுப் பணி என்பது சமுதாயத்தில் கௌரவம் தருகிற பணி என்பதால், இன்றும் அரசுப் பணிகளுக்காகத் தயாராகிற இளைஞர் கூட்டம் இருக்கிறது என்பதுதான் உண்மை.

அரசுப் பணிக்கு வந்து மக்களுக்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிற இளைஞர்களுக்கு அரசுப் பணிகள் நிச்சயம் ஒரு நல்ல தேர்வு.

ஒரு காலத்தில் ஒன்றிய அரசுப் பணிகளில் தமிழர்களும் மலையாளிகளும் வங்காளிகளும்தான் அதிக அளவில் கோலோச்சினர். ஆனால், காலம் செல்லச் செல்ல அந்த நிலைமை மாறியது. கூட்டாட்சித் தத்துவத்தை மதிக்காத அரசியல், அரசுக் கொள்கை, அரசுப் பணித் தேர்வுகளில் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் போன்ற காரணங்களால் இன்று வடவர்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கின்றன.

**பத்து மாதங்களுக்கு, மாதந்தோறும் அவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.**

அந்த விதியை மாற்றி எழுத, எந்தத் தேர்விலும் தடைகளை உடைத்து வாய்ப்புகளைப் பெற **‘திராவிட மாடல் அரசு’** சிந்தித்ததன் பலனே, **‘நான் முதல்வன்’** திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டிருக்கும் ‘போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிப் பிரிவு’.



### ஒன்றியத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம்!

‘நான் முதல்வன் - போட்டித் தேர்வுகள்’ என்ற பிரிவு இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் 2023 மார்ச் 7-ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யு.பி.எஸ்.சி) குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்வானவர்களின் எண்ணிக்கை, வங்கித் தேர்வுகள், ஒன்றிய அரசு ஆட்சேர்ப்பு முகமை கள் நடத்தும் ரயில்வே தேர்வுகள் (ஆர்.ஆர்.பி) மற்றும் பணியாளர் தேர்வுகள் (ஸ்டாஃப் செலக்சன்) ஆகியவை குறைந்து வருகின்றன.

இந்தப் பணிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர்களுக்குப் போதுமான அளவில் வெற்றி பெறுவதை உறுதி செய்யவும், தற்போதுள்ள நிலையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் ஒன்றிய அரசுப் பணிகளில் தமிழர்களின், தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான **‘திராவிட மாடல் அரசு’** முக்கியத் திட்டங்களை வகுத்துள்ளது.

அதன்படி, ஒன்றிய அரசின் ‘ஸ்டாஃப் செலக்சன் கமிஷன்’ பணிகளுக்கான தேர்வுகள், ‘ரயில்வே மற்றும் வங்கிப் பணிகளுக்கான தேர்வுகள்’ ஆகியவற்றுக்கு ஒருங்கிணைந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. நூறு நாட்களுக்கு நடைபெறும் இந்தப் பயிற்சியானது மே 29-ஆம் தேதி தொடங்கி, அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. இந்தப் பயிற்சிகளில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான தேர்வர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### ஊக்கத் தொகையுடன் பயிற்சி

நாட்டின் தலைமைப் பதவிகளில் அதிக அளவில் தமிழ் இளைஞர்களைக் கொண்டு வரும் நோக்கத்துடன், இந்தியாவிலேயே முதன்முறையாக சிறப்பான திட்டம் ஒன்றை **‘திராவிட மாடல் அரசு’** அறிமுகப்படுத்தி உள்ளது. அதன்படி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அண்ணா பணியாளர் நிர்வாகக் கல்லூரியுடன் இணைந்து குடிமைப் பணித் தேர்வு எழுத விரும்புவோருக்கு **‘நான் முதல்வன் போட்டித் தேர்வுகள்’** பிரிவின் கீழ், ஊக்கத் தொகையுடன் கூடிய சிறந்த பயிற்சி அளிக்கவுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் ஆயிரம் குடிமைப் பணித் தேர்வு விண்ணப்பதாரர்களை அடிப்படைத் தேர்வு மூலம் தேர்வு செய்து, அவர்கள் முதல்நிலைத் தேர்வினை (பிரிலிமினரி) வெற்றிகொள்ள பத்து மாதங்கள் பயிற்சி வழங்கப்படும். இந்தப் பத்து மாதங்களுக்கு, மாதந்தோறும் அவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இந்த அடிப்படைத் தேர்வு வரும் செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கிறது.

முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் அடுத்தகட்டமாக முதன்மைத் தேர்வில் (மெயின்) வெற்றி பெறுவதற்கு மொத்தமாக 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

இவை தவிர, அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளுக்காக ஐ.ஐ.டி. நிறுவனங்களால் நடத்தப்படும் ஜே.ஈ.ஈ. நுழைவுத் தேர்வு, சட்டப் படிப்புகளுக்கான ‘கிளாட்’ நுழைவுத் தேர்வு போன்றவற்றுக்குப் பயிற்சியளிக்க, உரிய திறன்களைக் கொண்ட தரமான பயிற்சியாளர்களை மாநிலம் முழுவதும் உருவாக்கிட, ‘வல்லுநர் பயிற்சி’ ஒன்றையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இப்படியான திட்டங்கள் வருங்காலத்தில் பெரிய பலன்களைத் தரும். இவற்றின் மூலம் உலகின் திறன் மையமாகவும், இந்திய அளவில் திறன்மிக்க அரசு அதிகாரிகளை உருவாக்கும் இடமாகவும் தமிழ்நாடு திகழும் என்பதில் எள் அளவும் ஐயமில்லை.


...சாதனை தொடரும்

### 100 நாள் பயிற்சியின் சிறப்பம்சங்கள்...

தினமும் காலை மூன்று மணி நேரம் வகுப்புகள் நடைபெறுகின்றன. மாலையில் மூன்று மணி நேரம் வழிகாட்டு நிகழ்ச்சிகள் (மென்டர்ஷிப்) வழங்கப்படுகின்றன. மேலும் வாரத்தில் ஒரு முறை பயிற்சித் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. இந்தவிதமான பயிற்சித் துறையில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவமுள்ள, குறைந்தது 500 தேர்வர்களையாவது வெற்றிபெற வைத்துள்ள தனியார் பயிற்சி நிறுவனங்களைத் தேர்வு செய்து, அவர்கள் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏதேனும் ஒரு கல்லூரியிலோ அல்லது மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலோ வகுப்புகள் நடைபெறுகின்றன. இந்தத் தேர்வர்களுக்காக, அரசு சார்பில் பயிற்சிக்கான புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

---

### யார் குற்றவாளி?



ஒன்றிய அரசு, அவசர கோலத்தில் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பலியாகியுள்ளன எட்டு சிவிங்கிப் புலிகள். இந்தியாவில் சிவிங்கிப் புலிகள் இனம் முற்றாக அழிந்த நிலையில், மீண்டும் சிவிங்கிப் புலிகள் இனத்தைப் பெருக்க ‘புராஜெக்ட் சீட்டா’ திட்டம் உருவாக்கப்பட்டது. நமீபியா நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவிங்கிப் புலிகள் மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் விடப்பட்டன.

இந்தத் திட்டத்தை அவசரகோலத்தில் நடத்தியது ஒன்றிய அரசு. வனவிலங்குகளைக் கூண்டுகளிலிருந்து திறந்துவிட்டு தடபுடலாக விளம்பரம் தேடிக் கொண்டார் பிரதமர் மோடி. இந்த நிலையில் கடந்த நான்கு மாதங்களில் எட்டு சிவிங்கிப் புலிகள் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளன. இந்த நிகழ்வுகள் வனவிலங்கு ஆர்வலர்களிடையே கொந்தளிப்புகளை உருவாக்கியுள்ளது.

முறையான திட்டமிடல் இல்லாமல், அவசரகோலத்தில் செயல்படுத்தியதே இதற்குக் காரணம் என ஆளும் அரசு மீது கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். விளம்பரம் தேடிக் கொண்ட பிரதமர், இதற்கு விளக்கம் தர வேண்டிய இடத்தில் இருக்கிறார். அவரோ வெளிநாடு சுற்றுப் பயணங்களில் உள்ளார்.

### ஃப்ளாஷ்பேக்



### தலைவருக்கு மகிழ்ச்சி!

நான் 11- ஆம் வகுப்பு படிக்கும்போது இளம் மாணவனாக பேரறிஞர் அண்ணாவையும், முத்தமிழறிஞர் கலைஞரையும் கடலூரில், ஒரு திரையரங்கத் திறப்பு விழாவுக்கு வருகை தந்த போது முதல்முறையாகச் சந்தித்தேன். அப்போது முதலே கழகத்தின் மீது பற்றுகொண்டு இயங்கி வந்த நான், 1970-ஆம் ஆண்டு பஞ்சாயத்துத் தலைவராகப் பொறுப்பு வகித்தபோது, தலைவர் கலைஞரின் 47-வது பிறந்த நாளில், சென்னை கோபாலபுரம் இல்லத்தில் அவரைச் சந்தித்தேன். இளைஞனாகப் பார்த்த என்னை, பஞ்சாயத்துத் தலைவராகக் கண்டது அவருக்கு மகிழ்ச்சி அளித்தது. பிற்காலத்தில் அவரே எனக்கு மூன்று முறை சட்டமன்ற உறுப்பினர் ஆகும் வாய்ப்பையும், சட்டமன்றக் கொறடா பொறுப்பையும் வழங்கினார் என்பதை இன்றைக்கும் நினைத்துப் பெருமையடைகிறேன்.



இராமலிங்கம்

**-மருதூர் ஏ.இராமலிங்கம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், காட்டுமன்னார்கோயில், கடலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


### கருவூலம்

**நடிப்பா... பதவியா?**

**1971-ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் வெளிவரும்போது, படப்பிடிப்புக்காக, காஷ்மீர் சென்றுவிட்டார், அப்போது கழகத்தின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர், கலைஞரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு தனக்கு அமைச்சரவையில் இடம் வேண்டும் என்றும், மருத்துவத் துறை ஒதுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். நாவலர், மாதவன் போன்ற மூத்த தலைவர்கள் அமைச்சரவையில் எம்.ஜி.ஆர் இடம்பெறுவதை எதிர்த்தபோதிலும், அவர் இடம்பெறுவதை கலைஞர் விரும்பினார். ‘நடிப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள், அது கோட்பாடுகளுக்கு மாறானது’ எனும் சட்ட வல்லுநர்களின் கருத்தை கலைஞர் தெரிவித்தார். நடிப்பைக் கைவிட மறுத்த எம்.ஜி.ஆர், அமைச்சர் பதவி கோரிக்கையைக் கைவிட்டார்.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 181




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131